நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# வழிகாட்டும் "மிதவை விவசாயம்'

First Published : 10 Mar 2011 12:00:00 AM IST



வங்கதேசத்தில் வெள்ளப்பகுதிகளில் செய்யப்படும் புதிய முறை விவசாயம்.

சிதம்பரம்: கனமழை, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின் காரணமாக தமிழக விவசாயிகள் அதிகளவு பொருளாதார பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக கடலோரப் பகுதி தமிழகத்திலும், காவிரி பாசனப் பகுதிகளிலும் வெள்ளத்தினால் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிகளவு பாதிக்கப்படுகின்றனர்.

இதே சூழலில் வங்கதேசத்தில் அடிக்கடி ஏற்படும் கனமழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களில் இருந்து பயிர்கள் பாதுகாக்க அங்குள்ள விவசாயிகள் புதிய முறையான மிதவை விவசாயத்தை மேற்கொள்கின்றனர். எனவே வெள்ளம் பாதிப்பு பகுதிகளில் உள்ள தமிழக விவசாயிகள் இந்த மிதவை விவசாய முறையை தெரிந்து கொண்டு பின்பற்றுவது அவசியமாகும்.

இதுகுறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

வங்கதேசத்தில் உள்ள பாசுதேவ்பூர் கிராமத்தில் அதிகளவு வேளாண் தொழிலாளர்கள் மிதவை வேளாண் சாகுபடிப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு தங்களது உணவு தேவை மற்றும் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து தேவையை நிறைவு செய்து வருகின்றனர். மிதவை விவசாயம் செய்ய தேவையான மிதவை படுக்கைகள் விவசாயிகளிடம் உள்ள வேளாண் இடுபொருள்களை கொண்டே தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தயாரிக்கும் முறை: முதலில் மூங்கில்களை நன்றாக சீவி ஒரு படுக்கை போல் தயார் செய்யப்படுகிறது. பின்னர் வைக்கோல் அல்லது ஆகாயத்தாமரை கழிவுகளின் மேல் போட்டு ஒரு படுக்கை போன்ற அமைப்பு உருவாக்கப்படுகிறது. இப்படுக்கையின் அளவு தண்ணீரில் கிடக்கும் காலத்தை ஒட்டியே அமைக்கப்படுகிறது.
சுமார் 20 முதல் 30 நாள்களில் தயார் செய்யப்படும் படுக்கையின் மேல் பயிர் சாகுபடிப் பணிகள் தொடங்கப்படுகிறது, விவசாயிகள் விதைகளை தூவியும், நாற்றங்கால் நடவு செய்யும் முறையை தங்களின் தேவைக்கேற்ப பின்பற்றுகின்றனர். இவ்வாறு மிதவை வேளாண்மையில் 20 வகை காய்கறிகள் வரை சாகுபடி செய்யலாம்.

வெண்டை, தக்காளி, கத்திரி, புடலை வகை காய்கறிகள், கொத்தமல்லி, பூசணிக்காய், முள்ளங்கி போன்றவற்றை எளிதாக சாகுபடி செய்யலாம். இதுதவிர நிலத்துக்கு உள்ளே விளையும் இஞ்சி, உருளை, மற்றும் மஞ்சள் சாகுபடியையும் மிதவை வேளாண் வாயிலாக மேற்கொள்ள முடியும். இவ்வாறு மிதவை படுக்கைகள் மூலம் விவசாயம் செய்யும் போது ரசாயான உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவது கிடையாது.
குறிப்பாக 1988 மற்றும் 1998-ம் ஆண்டுகளில் வங்க தேசத்தை பெரும் அளவில் இயற்கை சீற்றங்கள் தாக்கியபோது மிதவை விவசாய படுக்கைகள் மேல் கூடாரம் அமைத்து இரண்டு மாதங்கள் வரை தங்கி தங்களது பொருள்களையும், கால்நடைகளையும் இவர்கள் பாதுகாத்துள்ளனர்.

சவால்கள்: மிதவை படுக்கைகள் தயார் செய்ய நீண்ட அளவு கொண்ட வைக்கோல்கள் தேவை. தற்போது குறுகிய கால குட்டை ரகங்களே அதிகளவு சாகுபடி செய்யப்படுவதால் மிதவை படுக்கைகள் தயார் செய்வது எளிதல்ல. ஆகாயத்தாமரை கொண்டு தயார் செய்யப்படும் சூழலில் கடல் தண்ணீர் வெள்ளத்துடன் கலக்கும் போது அவற்றின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும்.
எனவே நீண்ட வைக்கோல் தரும் பாரம்பரிய நெல் ரகங்கள் வாயிலாகவே மிதவைப் படுக்கைகள் மற்றும் மிதவை விவசாய பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றார் ராஜ்பிரவீன்.

**கரும்புத் தோகைகளை எருவாக்கும் இயந்திரம்!**

First Published : 10 Mar 2011 12:00:00 AM IST



திருவண்ணாமலை: கரும்புத் தோகைகளை இயற்கை எருவாக்கும் இயந்திரம் கூட்டுறவுத் துறை மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக கரும்பு விவசாயிகள் கரும்புத் தோட்டத்தில் அறுவடை முடிந்த பின்பு அதன் தோகைகளை நெருப்பு வைத்து எரித்து விடுகின்றனர். இதனால் மண்வளம் கெடுகிறது. மண்ணில் நன்மை செய்யும் பூச்சிகள் அழிந்துவிடுகின்றன. மேலும் கட்டகால் 3 முறைதான் முளைப்பு வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது.

இதைக்கருத்தில் கொண்டு கரும்புத் தோகைகளை சுத்தமாக பொடி செய்து எருவாக்கும் இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கரும்புத் தோகைகளை இயந்திரம் மூலம் எருவாக்குவதால் மண்ணின் காரத்தன்மை அதிகப்படுத்தப்படுகிறது. மண்ணின் முளைப்பு தன்மை 7 முதல் 8 முறை கரும்பு பயிர் செய்ய உதவுகிறது.

இந்த எருவின் மேல் நீர் பாய்ச்சும் போது நிலத்தின் ஈரத்தன்மை நிலை நிறுத்தப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் நன்மை கிடைக்கிறது. கரும்பு விவசாயிகளுக்கு மிகுந்த பயன் தரும் இந்த இயந்திரம் கூட்டுறவுத் துறை மூலம் குறைந்த வாடகைக்கு தரப்படுகிறது. முதல் கட்டமாக திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம்பட்டு உழவர் பணிக் கூட்டுறவு சங்கத்தில் முதன்முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.1.78 லட்சமாகும்.

இந்த இயந்திரம் குறித்த செயல்முறை விளக்கம் விவசாயிகளுக்கு இலவசமாக தரப்படுகிறது. விவசாயிகள் குறைந்த வாடகையில் தங்கள் தோட்டத்தில் கரும்புத் தோகையை எருவாக்கி பயன் பெறலாம் என கூட்டுறவு இணைப் பதிவாளர் ச.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**மணிலா பயிரை பாதுகாப்பது எப்படி?**

First Published : 10 Mar 2011 12:00:00 AM IST



காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது பரவலாக மணிலா பயிரில் பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதல் அதிகம் தென்படுகிறது. இதனை உடனடியாக கட்டுப்படுத்தாவிட்டால் விவசாயிகள் பெருமளவு மகசூலை இழக்க நேரிடும்.

குறிப்பாக பல்வேறு இடங்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், அசுவினி ஆகியவை காஞ்சிபுரம், வாலாஜாபாத் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன.

மேலும் இலைகளைக் கடித்து உண்ணும் பூச்சிகளான புரோடினியா மற்றும் பச்சைப் புழுக்களும் காணப்படுகின்றன.

நோய்த் தாக்குதல்: பூச்சிகள் மட்டுமின்றி துருநோய், இலைப்புள்ளி ஆகிய நோய்களும் மணிலாவில் பரவலாக தென்படுகிறது. துருநோய் என்பது பயிரின் எல்லா வளர்ச்சி பருவத்திலும் காணப்படும். இலைகளின் அடிப்பாகத்தில் மஞ்சள் நிற கொப்பளங்கள் தோன்றும். இந்நோயின் தாக்குதல் அதிகமாகும்போது இலைகள் காய்ந்துபோய் பெரும் சேதம் ஏற்படும்.

இதேபோல் இலைப் புள்ளி நோய் என்பது மணிலாப் பயிரின் இலையின் மேல் பகுதியில் கருப்பு நிற இலைப்புள்ளிகள் காணப்படும். அவற்றைச் சுற்றி மஞ்சள் நிற வளையம் காணப்படும். இவற்றாலும் மணிலா பயிருக்கு பாதிப்பு உண்டாகும்.

கட்டுப்படுத்தும் வழிகள்: இந்தப் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்துவது குறித்து வாலாஜாபாத் வேளாண்மை அலுவலர் முத்துலட்சுமி கூறியது:

இலைப்பேன், அசுவினி போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபரிட் 200 எஸ்.எல். - 40 மி.லி. அல்லது டைமெத்தோயேட் - 400 மி.லி. பயன்படுத்திக் கட்டுப்படுத்தலாம். சுருள்

பூச்சியைக் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் -400 மி.லி. அல்லது எண்டோசல்பான் 400 மி.லி. தெளித்து கட்டுப்படுத்தலாம்.

புரோடினியா மற்றும் பச்சைப் புழுக்களை ஸ்பைனாசாட் - 60 மி.லி., இன்டாக்ஸ்ஸ்கார்ப் 100 மி.லி. அல்லது பெனவலரேட் 200 மி.லி. அல்லது எண்டோசல்பான் 400 மி.லி. தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

துருநோய் மற்றும் இலைப் புள்ளி நோய்களின் அறிகுறிகள் தென்பட்டால் ஏக்கருக்கு குளோரோதலோனில் 75ரட 400 கிராம் தெளிக்க வேண்டும். இலைப்புள்ளி நோய்கள் மட்டும் தென்பட்டால் ஏக்கருக்கு கார்பென்டசிம் 50ரட 200 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். துருநோயின் அறிகுறிகள் மட்டும் தென்பட்டால் ஏக்கருக்கு காலிக்ஸின் 75உஇ 100 மி.லி. அளவில் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இத்தகைய வழிமுறைகளை விவசாயிகள் நல்ல முறையில் பின்பற்றும்போது மணிலா பயிர் பாதுகாப்புடன் விளைச்சல் தரும் என்றார்

முத்துலட்சுமி.

**அந்தியூர் ரூ.24 லட்சத்துக்கு வேளாண் பொருள்கள் ஏலம்**

First Published : 09 Mar 2011 10:47:14 AM IST

பவானி, மார்ச் 8: அந்தியூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ரூ.24 லட்சம் மதிப்பிலான வேளாண் பொருள்கள் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

இங்கு, விற்பனைக்கு வந்த 30 ஆயிரம் தேங்காய்களில், சிறிய தேங்காய் ரூ.3-க்கும், பெரிய தேங்காய் ரூ.12-க்கும் விற்பனையானது.

தேங்காய் பருப்பு கிலோ ரூ.47.69 முதல் ரூ.60.19 வரை விலைபோனது. இதேபோல்,

ஆமணக்கு கிலோ ரூ.35.40 முதல் ரூ.47.50 வரை விலை போனது.

மக்காச்சோளம் 200 மூட்டைகள் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டன. கிலோ ரூ.10.36 முதல் ரூ.10.66 வரை விலை போனது.

துவரை 180 மூட்டை விற்பனைக்கு வந்ததில், முதல் ரகம் கிலோ ரூ.29.89 முதல் ரூ.35.22 வரையிலும், இரண்டாம் ரகம் ரூ.22 முதல் ரூ.22.19 வரையிலும் விற்பனையானது.

நிலக்கடலை 170 மூட்டைகள் ஏலத்துக்கு வந்தது. பச்சைக் கடலை கிலோ ரூ.20.19 முதல் ரூ.23.50 வரையும், காய்ந்த கடலை ரூ.30.56 முதல் ரூ.34 வரையிலும் விற்கப்பட்டது.

**உயரும் வெப்பத்தால் கோழிகளின் தீவன எடுப்பு குறையும்**

First Published : 09 Mar 2011 10:08:51 AM IST

நாமக்கல், மார்ச் 8: கோடை காலம் தொடங்க இருப்பதால் கோழிகளின் தீவன எடுப்பு குறைய வாய்ப்புள்ளது என நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

÷இதுகுறித்து அம் மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை: அடுத்த நான்கு நாள்களுக்கு நாமக்கல்லில் வானம் தெளிவாகவும், மழையற்றும் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியப்ஸ தொட வாய்ப்புள்ளது. குறைந்தபட்ச வெப்பநிலை 20 டிகிரி செல்சியஸôக இருக்கும்.

÷காற்றின் வேகம் மிதமாகவும், அதன் திசை தெற்காகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் பகலில் 40-45 சதவீதமாக நிலவும். உயரும் பகல் வெப்பம் காரணமாக அயற்சி ஏற்பட்டு, கோழிகளின் தீவன எடுப்பு இயல்பான அளவைவிட குறைந்து காணப்படும்.

÷இரவில் வெப்ப அளவு குறைய வாய்ப்பில்லாததால், அதிக சோர்வை இத் தட்ப வெப்பநிலை கோழிகளுக்கு ஏற்படுத்தாது. இச் சீதோஷ்ணநிலை கோழிகளுக்கு சாதகமானது.

விவசாயிகளுக்கான ஆலோசனை: மரவள்ளியில் செந்தேன் பூச்சி தாக்குதல் அதிகமாக வாய்ப்புள்ளது.

தினமலர்

**உளுந்து பயிரில் நோய் தாக்குதலை தடுக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,00:21 IST

செஞ்சி : உளுந்து பயிரில் நோய் தாக்குதலை தடுக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வல்லம் வட்டார வேளாண்மை இயக்குனர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.வல்லம் வேளாண்மை உதவி இயக்குநர் துரைசாமி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:வல்லம் வட்டாரத்தில் தற்போது சாகுபடி செய்துள்ள இரவை உளுந்து பயிரில் சில வயல்களில் மஞ் சள் தேமல் நோய் தாக்கும் அறிகுறி காணப்படுகிறது.இப்பருவத்தில் உளுந்து பயிரில் காய்ப்புழு தாக்குதல் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது.

மஞ்சள் தேமல் நோயும், காய்ப்புழு தாக்குதலும் ஏற்படாமல் தடுப்பதற்கு உரிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.மஞ்சள் நோயை பரப்பும் பச்சை தத்துப் பூச்சியை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 300 மில்லி மோனோகுரோட்டோபாஸ் பூச்சி மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலையில் தெளிக்க வேண்டும்.காய்ப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 300 மில்லி எண்டோசல்பான் பூச்சி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

மேலும், வேம்பில் இருந்து உருவாக்கப்படும் தாவர பூச்சி கொல்லி மருந்தான அசாடிரக்டினை ஏக்கருக்கு 500 மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.வல்லம் பகுதியில் இரவை உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உடனடியாக மேற்கண்ட பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**கோகோ விலை கிலோ ரூ.160சாகுபடிக்கு விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,02:41 IST

தேனி:மாவட்டத்தில் கோகோ ஒரு கிலோ 160 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டு வருவதால், இதனை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
தேனி மாவட்டத்தில் தற்போது 600 ஹெக்டேரில் கோகோ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த சாகுபடிக்கு ஹெக்டேருக்கு தோட்டக்கலைத்துறை 12 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறது. விவசாயிகளிடம் கோகோ கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், மூன்றாண்டு சர்வதேச விலை சராசரி, இந்திய மார்க்கெட் விலை சராசரி, இதில் எது அதிகமோ அந்த விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

இந்த ஒப்பந்தப்படி நடப்பு ஆண்டு விவசாயிகளிடம் இருந்து சர்வதேச நிறுவனங்கள் ஒரு கிலோ கோகோ 64 ரூபாய்க்கு கொள்முதல் செய்தாலே போதும். ஆனால் தற்போது மார்க்கெட்டில் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ 160 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.இந்த விலை உயர்வு காரணமாக விவசாயிகள் அதிக பரப்பில் கோகோ சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**மா மரங்களில் தத்துப்பூச்சி தாக்குதல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,02:37 IST

தேனி:மாவட்டம் முழுவதும் மா மரங்களில் தத்துப்பூச்சி, இலைப்புள்ளி நோய் தாக்குதல் அதிகரித்து வருகிறது. தற்போது மா மரங்கள் பூ மற்றும் பிஞ்சு பருவத்தில் உள்ளன. அனைத்து பகுதிகளிலும் தத்துப்பூச்சி தாக்குதல் அதிகரித்து வருகிறது. காம்புகளில் உருவாகும் தத்துப்பூச்சிகள் சாற்றினை உறிஞ்சி பூக்களையும், மாவினையும் அழித்து விடுகிறது. அதேபோல் இலைப்புள்ளி நோயும் அதிகரித்து வருகிறது.

இந்த புள்ளி பிஞ்சுகளில் விழுந்தால் காய் கருத்து விடுகிறது. இதனால் சாகுபடி பாதிக்கப்படுவது மட்டுமின்றி, விவசாயிகளுக்கு வருவாய் பாதிப்பும் ஏற்படும் என விவசாயிகள் கவலையில் உள்ளனர்.ஒரு லிட்டர் தண்ணீரில் இமிடோகுளோபின் அரை மில்லி, கார்பன்டை அசின் ஒரு கிராம் கலந்து காலை 8 மணிக்கு முன்னர் அல்லது மாலை 5 மணிக்கு பின்னர் தெளிக்க வேண்டும். ஒரு மாதம் கழித்து எண்டோசல்பான் 2 மி.லி., ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**பத்து இடங்களில் நெல் கொள்முதல் மையங்கள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,02:36 IST

தேனி:தேனி மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 10 மையங்களில் நுகர்பொருள் வணிப கழகம் சார்பில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.
தேனி மாவட்டம் முழுவதும் இரண்டாம் போக சாகுபடிக்கான நெல் அறுவடை தொடங்கி உள்ளது. நெல் கொள்முதல் செய்ய, உத்தமபாளையம், கம்பம், கூடலூர், சின்னமனூர், வீரபாண்டி, சீலையம்பட்டி, பெரியகுளம், மேல்மங்கலம், குன்னூர், போடியில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதால், தற்போதைய தேர்தல் அறிவிப்பால் இந்த பணியில் எந்த பாதிப்பும் இருக்காது. வழக்கம் போல் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யும் பணி தொடரும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**"வனங்களை பாதுகாக்க வேண்டும்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,02:20 IST

கோவை : ""சர்வதேச வன ஆண்டில் வன மரபு வளங்கள் மேலாண்மை கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. வனம் மற்றும் பல்லுயிர் சூழலை பாதுகாக்க இது போன்ற அமைப்பு மிகவும் அவசியம்," என்று சுகர்கேன் பிரீடிங் இன்ஸ்டிடியூட் இயக்குனர் விஜயன்நாயர் பேசினார்.கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில், வன மரபு வளங்கள் மேளாண்மை குறித்து இரண்டு நாள் பயிலரங்கு நடந்து வருகிறது.

ஒருங்கிணைப்பு செயலா ளர் பழனிச்சாமி வரவேற்றார். வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குனர் கிருஷ்ணகுமார் பயிலரங்கு குறித்து அறிமுக உரையாற்றினார். சுகர்கேன் பிரீடிங் இன்ஸ்டிடியூட் இயக்குனர் விஜயன்நாயர் தலைமை தாங்கி பேசியதாவது:சர்வதேச வன ஆண்டில் வன மரபு வளங்கள் மேலாண்மை கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. வனம் மற்றும் பல்லுயிர் சூழலை பாதுகாக்க இது போன்ற அமைப்பு மிகவும் அவசியம். இதன் முக்கியத்துவத்தை நாட்டு மக்களுக்கு உணர்த்துவது நம் கடமை. அப்போதுதான் வனங்களையும், வன உயிர்களையும் பாதுகாக்கமுடியும், என்றார்.

தமிழ்நாடு வனத்துறையின் தலைமை வனப்பாதுகாவலர் சுந்தராஜூ, பயிலரங்கு குறித்த புத்தகம் மற்றும் கையேட்டை வெளியிட்டு பேசுகையில், "நாம் எல்லோரும் சேர்ந்து வனத்தையும், பல்லுயிர் சூழலையும் பாதுகாக்கவேண்டும் என்பதுதான் இந்த கூட்டமைப்பின் நோக்கம். இது நமக்கு மட்டுமல்லாமல் அடுத்த தலைமுறைக்கும் நன்மை அளிக்கக்கூடிய அமைப்பு, என்றார். ஆராய்ச்சி குழு ஒருங்கணைப்பாளர் ரகுநாத், விரிவாக்க அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோர் பேசினர். இந்தியா முழுவதிலும் இருந்து வந்திருந்த 100க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பயிலரங்கில் பங்கேற்றனர்.

**புதிய மீன் மார்க்கெட் திறப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,02:19 IST

கோவை : கோவை மாநகராட்சி சார்பில் ரூ.2.38 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய மீன் மார்க்கெட்டில், வியாபாரிகள் நேற்று விற்பனையை துவக்கினர்.கோவை உக்கடம் மீன் மார்க்கெட்டுகளை முழுமையாக இடித்து விட்டு புதிய மீன் மார்க்கெட் கட்டுவதற்கு மாநகராட்சி முடிவு செய்தது. அதற்கான தீர்மானத்தை மன்றத்தில் நிறைவேற்றியது.

அதன்படி உக்கடத்திலிருந்து செல்லும் பேரூர் பைபாஸ் ரோட்டில் ரூ.2.38 கோடி செலவில் 68 நவீன மீன் கடைகள் கட்டப்பட்டன. அவை மின் ஏலம் மூலம் மீன் வியாபாரிகளுக்கு மாநகராட்சி ஒதுக்கீடு செய்தது. அதில் மீன் வளர்ச்சித்துறைக்கு இரு கடைகள் ஒதுக்கப்பட்டன. ஒரு சில காரணங்களால் மீன் வியாபாரிகள் பழைய கடைகளை காலிசெய்து விட்டு புதிய கடையை பயன்படுத்த தயக்கம் காட்டிவந்தனர். இந்நிலையில் மாநகராட்சி அதிகாரிகள் பேசியதை தொடர்ந்து புதிய கடைகளை இன்று வியாபாரிகள் திறந்து வியாபாரத்தை துவக்கினர்.

ஏலத்தில் கடை கிடைக்காத மீன் வியாபாரிகளுக்கு தரைக்கடைகள் நாளொன்றுக்கு ரூ.20 கட்டணத்தில் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்று மாநகராட்சி நிர்வாகம் ஏற்கனவே அறிவித்திருந்தது. இது தொடர்பாக மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அதன் பின் தரைக்கடை வியாபாரிகளுக்கு கடைகள் ஒதுக்கப்படும் என்று மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வருவதற்கு முன்பே மீன் மார்க்கெட் திறக்கப்பட்டதால் எந்த சர்ச்சையும் ஏற்படவில்லை.

**வரத்து அதிகரிப்பு எதிரொலி: அவிநாசி பருத்தி ஏலம் ரத்து**

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2011,22:33 IST

அவிநாசி : அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு கடந்த வாரம் வரத்து அதிகரித்ததால், நேற்றைய ஏலம் ரத்து செய்யப்பட்டது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை நடைபெறும் பருத்தி ஏலத்துக்கு, சில வாரங்களாக வரத்து அதிகரித்து வருகிறது. கடந்த வார ஏலத்துக்கு 10,500 மூட்டை பருத்தி வரத்தாக இருந்தது. வரத்து அதிகமானதால், ஏலம் நடக்கும் களம் தவிர, அருகிலுள்ள தனியார் இடத்திலும் பருத்தி மூட்டைகள் அடுக்கப்பட்டன.

இரண்டு நாட்கள் ஏலம் நடந்தது; ரூ.2.38 கோடிக்கு வர்த்தகம் நடந்தது.பருத்தியை ஏலத்தில் எடுத்த வியாபாரிகள், மூட்டைகளை இன்னும் எடுத்து செல்லாமல் உள்ளனர். இதன் காரணமாக நேற்று நடைபெற இருந்த ஏலம் ரத்து செய்யப்பட்டது. சங்க நிர்வாகிகள் கூறுகையில், "கடந்த வாரம் பருத்தி அதிகமாக வந்ததால், இந்த வார ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது. அடுத்த வார ஏலம் குறித்து விரைவில் அறிவிக்கப்படும்,' என்றனர்.

## ஏப்ரல்–டிசம்பர் மாத காலத்தில் உப்பு ஏற்றுமதி 22% உயர்வு



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஏப்ரல்–டிசம்பர்) சாதாரண உப்பு ஏற்றுமதி 22 சதவீதம் (20.38 லட்சம் டன்) அதிகரித்து 24.88 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இந்த தகவலை வர்த்தகம் மற்றும் தொழில்துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஜோதிர் ஆதித்யா சிந்தியா தெரிவித்தார்.*
*வெளிநாடுகளில் இந்திய உப்பிற்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இதனை ஈடுகட்டும் வகையில் நம்நாட்டில் உப்பு உற்பத்தி நன்றாக உள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டின் உப்பு உற்பத்தி 1.45 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.*

## தங்க இலை விருது பெற்ற ஆர்கானிக் தேயிலை ரூ.360க்கு ஏலம்

*குன்னூர், மார்ச்.10–*

*தங்க இலை விருது பெற்ற ஆர்கானிக் தேயிலை ஒரு கிலோ ரூ.360க்கு ஏலம் சென்றது.*

### தங்க இலை விருது

*தென்னிந்திய தேயிலையின் விற்பனை அதிகரிக்கும் வகையில் தேயிலை வாரியம்*

மற்றும் உபாசி ஆகியவை இணைந்து கடந்த 2004–ம் ஆண்டு முதல் தங்க இலை விருதுக்கான போட்டியை நடத்தி வருகின்றன. 7–வது தங்க இலை விருதுக்கான இறுதி போட்டி கடந்த பிப்ரவரி மாதம் 26–ந் தேதி கோவையில் நடைபெற்றது.
தங்க இலை விருதுக்கான போட்டியில் கலந்து கொண்ட தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலை தூள் முதல் முறையாக தேயிலை ஏல மையத்தின் மூலம் சிறப்பு ஏலத்தில் விற்பனை செய்ய தங்க இலை விருது அமைப்பு குழுவினர் முடிவு செய்தனர். இதன்படி தங்கஇலை விருது போட்டியில் கலந்து கொண்ட தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலை தூள் ஏலம் கடந்த 7–ந் தேதி நடைபெற்றது.

**விற்பனை**

இது குறித்து தங்க இலை விருதுக்கான அமைப்பு குழு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதரன் செய்தி குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–
7–வது தங்க இலை விருதுக்கான போட்டியில் கலந்து கொண்ட தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலைதூள் கடந்த 7–ந் தேதி தேயில ஏல மையத் தின்மூலம் விற்பனை செய்யப் பட்டது. இந்த சிறப்பு ஏலம் குன்னூர், கோவை, கொச்சி, கவுகாத்தி, கொல்கத்தா, சிலிகுரி ஆகிய 6 ஏல மையங் களில் நடைபெற்றது. மொத் தம் 118 வியாபாரிகள் சிறப்பு ஏலத்தில் கலந்து கொண்டனர்.

**டஸ்ட் ரகம்**

குன்னூர் ஏல மையத்தில் 43 வியாபாரிகளும், கோவை ஏல மையத்தில் 32 வியாபாரிகளும், கொச்சியில் 31 வியாபாரிகளும், சிலிகுரி ஏல மையத்தில் 5 வியாபாரிகளும், கொல்கத்தா ஏல மையத்தில் 4 வியாபாரி களும், கவுகாத்தி ஏல மையத் தில் 3 வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.
ஏலத்துக்கு மொத்தம் 40 ஆயிரத்து 743 கிலோ தேயிலைதூள் வந்தது. இதில் 26 ஆயிரத்து 15 கிலோ இலை ரகமும், 14 ஆயிரத்து 728 கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும். இலை ரக விற்பனையில் 22 ஆயிரத்து 626 கிலோ தேயிலை தூள் விற்பனையானது. இந்த ரகத்தின் சராசரி விலையாக ரூ.140.40 காசுகள் என்று இருந்தது. டஸ்ட் ரகத்தில் 36 லாடுகள் விற்பனை ஆனது. இதன் சராசரி விலையாக ரூ.117.68 காசுகள் என்று

இருந்தது.

**ரூ.360–க்கு விற்பனை**

இதில் உயர்ந்த பட்ச விலையாக இலைரகத்தின் வெல்பெக் ஆர்கானிக் எப்.ஓ.பி.ரக தேயிலை தூள் ஒரு கிலோ ரூ.360க்கு ஏலம் போனது.
டஸ்ட் ரகத்தின விக்னேஸ் வர் ஸ்பெஷல் தேயிலை ஒரு கிலோ ரூ.290க்கு ஏலம் போனது. ஏலத்தில் கோவையின் ஆர்.ஜே.டீ கார்ப்பரேஷன் 28 லாடுகளை வாங்கியது.
கோவை பன்சாலி கம்பெனி 20 லாடுகளை ஏலம் எடுத்தது.
இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.